# செந்தமிழ்

பகுதி : 7
தொகுதி : 97
ஜூலை 2003

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

பகுதி : 7
தொகுதி : 97
ஜுலை 2003

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

1. இதழ்மணம் ...229

2. இயற்சொல் ...231
முனைவர் தெ.மேகநாதன்

3. அரிய புதையல் ...236
புலவர். க.சண்முகம்

4. திருவெம்பாவை – 14 ...241
பேராசிரியர் சுப.அண்ணாமலை

5. அரியகுறட்பாக்களும்
உரிய பொருளும் ...244
பேரறிஞர் நா.பாலுசாமி

# இதழ்மணம்

அரிய குறட்பாக்களும் உரிய பொருளும் என்னும் தலைப்பில் பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் எழுதியுள்ள கட்டுரை சிந்தனைக்கு விருந்தாகும். பண்டைக்காலந்தொடங்கித் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் தோன்றியுள்ளன. தொட்டனைத்தூறும் மணற்கேணி போல கற்பவர் சிந்தனைக்கும் சூழலுக்கும் ஏற்ப கருத்துக்கள் தோன்றுகின்றன. அதனால் திருக்குறளுக்கு உரைகள் வந்த வண்ணம் உள்ளன. கூர்த்த மெய்ப்பொருட் திட்பமும் பட்டறிவுடன் பரந்த கல்விப்பரப்பும் உடைய அறிஞர் பெருமக்கள் இலக்கண இலக்கிய நோக்கிலும் தருக்க முறையிலும் திருக்குறளை எடுத்துரைக்கும்போது மாறுபட்ட உரைகளின் திறனும் திட்பமும் நுட்பமும் கருத்து ஆழமும் கற்பவர் சிந்தனையை மேலும் கூர்மைப்படுத்துகிறது.

அறிதோறும் அறியாமை காண்பதுபோல புதிய விளக்கங்கள் கல்வி இன்பம் நல்குகிறது. பல்வேறு உரைகளும் பரிமேலழகர் உரையையே மையமாகவைத்து உரசிப்பார்க்கின்றன. பரிமேலழகர் உரையும் திருக்குறளும் திறனாய்வுக்குரியதாகிறது. பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் தம் கட்டுரையில் அறிவுத்திறத்தால் பல்வேறு திருக்குறளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறார். நுண்ணிய பொருளை எடுத்துரைக்கிறார்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் என்னும் திருக்குறளில் "இயல்புடைய மூவர்" என்பதை சிலப்பதிகாரத்தை அடியொற்றி விளக்குவதோடு பரிமேலழகர் மற்றொரு திருக்குறளுக்கு எடுத்துரைத்துள்ள விளக்கத்திலிருந்து காட்டியிருப்பது அவருடைய இலக்கிய வாழ்க்கையின் நீண்ட பயணத்தின் மைல்கல்லாகும்.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவை பதினான்காம் திருப்பாட்டுக்கு விளக்கமளித்துள்ளார்கள். பழைய வாழ்க்கை என்பது இயற்கையோடு இயைந்த வாழ்க்கை; இயற்கைதரும் இன்பம் எல்லாம் திருவருள் இன்பமாகக்கண்டு அனுபவித்த அருளாளர் வாழ்வை பாடல் முழுவதும் அருட்புனலில் ஆனந்தமாய் ஆடும் அழகைத் தமிழ் ஓவியமாகப் பேராசிரியர் தீட்டியுள்ளதைப் படித்து இன்புறலாம்.

இவ்விதழில் முனைவர் தெ.மேகநாதன் அவர்களும் புலவர் க.சண்முகம் அவர்களும் கட்டுரையளித்துள்ளனர். (தமிழ்ச்சுவைஞர்களுக்கு இனிய விருந்து.)

தமிழ் ஆர்வலர்களைச் செந்தமிழ் வாசகர்களாகச் செய்யும் பணியில் இவ்விதழைக்கண்ணுறும் நண்பர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுகிறேன்.

# இயற்சொல்

*முனைவர் தெ.மேகநாதன்*

## செய்யுள் ஈட்டச் சொற்கள்

தமிழில் வழங்கும் சொற்களைத் தொல்காப்பியர் பெயர், வினை, இடை, உரி என்ற பாகுபாட்டில் அடக்குவர். இப்பாகுபாட்டினுள் அடங்கும் செய்யுள் ஈட்டச் சொற்களைத் தொல்காப்பிய எச்சவியலில் வேறொரு வகையில் பாகுபடுத்திக் காட்டுகின்றார்.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.நூ397)

இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும். வடசொல்லும் என அத்துணையே செய்யுள் ஈட்டுவதற்குரிய சொல்லாவன என்பது அதன் பொருள். இப்பாகுபாட்டின் அடிப்படையில் இயற்சொல் எது என்பது ஆய்விற்குரியது.

## செய்யுள்

இப்பாகுபாடு குறித்து நுணுகி ஆய்வதற்கு முன்பு 'செய்யுள்' என்ற சொல் குறித்துச் சிந்தித்தல் நலம். செய்யுள்-செய்யப்படுவது. அஃதாவது செய்யப்படும் அனைத்தையும் கவிதை, உரைநடை இரண்டையும் குறிக்கும். தொல்காப்பியர் இச்சொல்லை இவ்வாறு கருதியுள்ளார் என்பதற்கு தொல்காப்பிய நூலிலேயே சான்று உள்ளது.

"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப" (தொல்.செய்யு.நூ.157)

என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா அடிவரையில்லாச் செய்யுள் அறுவகைப்படும் என்று கூறுகின்றது. எழுநிலமாவது பாட்டு, உரை, நூல் வாய்மொழி பிசி, அங்கதம், முதுசொல் என இளம்பூரணர் உரை கூறுகின்றார். இவற்றில் பாட்டொழிந்த ஆறும் அடிவரையில்லாதனவாகும். இவைகளில் ஒன்று உரை என்றும் (நூ.158) அந்த உரை நான்கு வகைப்படும் என்றும், *இவ்வுரைநடை*

"பாட்டிடை வைத்த குறிப்பி னாலும்
பாவின் றெழுந்த கிளவி யானும்

பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப"

(தொல்.சொல்.நூ-166)

எனக் கூறுகிறார். இதனால் செய்யுள் ஈட்டச் சொல் என்று குறிப்பிட்டது கவிதைகளையும், உரைநடையையும் உணர்த்துவதாகவே கொள்ளவேண்டும். ஆனால் எல்லா உரையாசிரியர்களும் செய்யுள் என்பது கவிதையை மட்டுமே சுட்டுவதாகக் கருதுகின்றனர்.

### செய்யுளும் வழக்கும்:

செய்யுளும், வழக்கும் இலக்கணத்திற்கு இருப்பதால், செய்யுள் ஈட்டச் சொல் என்று வியந்து குறிப்பிட்டது வழக்கிற்கும் பொருந்துமா என்பதை இளம்பூருணர் சிந்திக்கின்றார். "திரிசொல் செய்யுளுக்கே உரியது. ஒழிந்த மூன்றும் வழக்கிற்கும் உரியவாகிச் செய்யுட்கும்" என்பது அவர் கருத்து.

"வழக்கிற்கும் உரியவாகிச் செய்யுட்கும் புகும் என்றது. பேச்சு மொழியே செய்யுட்கு அடிப்படை என்பதைப் புலப்படுத்துகிறது. இலக்கிய மொழிகூடப் பேச்சு மொழியின் அடிப்படை என்ற கருத்து உண்டு. இக்கருத்து இலக்கிய மொழி பேச்சு மொழியிலிருந்து முழுவதும் வேறுபட்டு விடக்கூடாது என்ற உண்மையைச் சுட்டுகிறது", என்பார் டாக்டர் செ.வை.சண்முகம்.

### இயற்சொல்:

இனி இயற்சொல் என்பது எது? என்ற சிந்தனையில் தொல்காப்பியர்,

"அவற்றுள்
இயற்சொல்தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம் பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே"

என்பார் தம் பொருள் வழுவாமல் இசைப்பது எது? என்பது விடைகாண வேண்டிய முக்கிய வினா. இவ்வினாவிற்கு விடை கூறுவதில் இளம்பூரணனார், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் ஒருமித்த கருத்தினர். தெய்வச்சிலையார் மட்டும் வேறுபட்ட கருத்து உடையவராக் காணப்படுகின்றார்.

இளம்பூரணர் 'மற்று இவற்றைத்' தம் பொருள் வழாமை இசைக்கும் என்பது என்ன? ஒழிந்தன தம்பொருள் வழுவுமோ? என்ற வினாவை எழுப்ப ஓர் எடுத்துக்காட்டைத் தருகின்றார்.

நாயை நமலி என்பர் தென்பாண்டி நாட்டார். என்றக் கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங்கு உணர்ப என்பர். இவ்வுரையின் வழி "ஒருவட்டார வழக்கைப் பிற வட்டார மக்கள் அறிந்து இருக்கமாட்டார்கள். வட்டார வழக்கு அல்லாததை அதாவது நிலைமொழி வழக்கை எல்லா வட்டார மக்களும் உணர்வார்கள் என்று இளம்பூரணர் கருத்தை நாம் பொதுமைப் படுத்தலாம்" என்பர் செ.வை. சண்முகம்.

திரிபின்றி இயல்பாகிய சொல் ஆதலின் இயற்சொல்லாயிற்று. கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற்சொல்லாயிற்று எனினும் அமையும் என்பார். சேனாவரையர். இவரது விளக்கம் இளம்பூரணர் கருத்தைப் பொதுமைப்படுத்துவதுபோல் உள்ளது. செந்தமிழ் நிலம் என்று தொல்காப்பியர் குறித்ததால் 'கொடுந்தமிழ்' நிலத்துப் பிறவழக்கினைச் சேனாவரையர் கொண்டுள்ளார். நச்சினார்கினியர் தமது பொழிப்புரையில் "செந்தமிழ் நிலத்தின்கண் வழங்குதலோடு பொருந்தி அச்செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் கேட்டார்க்குத் தத்தம் பொருள் வராமல் ஒலிக்கும் சொல்லாம் என்பார்.

உரையாசிரியர்களின் கருத்தினை ஒட்டியே சரியான விளக்கம் என்ன என்று அறிய இக்கால அறிஞர்கள் கருத்துக்களையும் அறிதல் வேண்டும். மி.சா. சுப்பிரமணிய சாஸ்த்திரியார் "தாய்மொழிச்சொல் என்று விளக்கி வடசொல்லுக்கு மாறானது என்பர். சேனாவரையர் இயற் சொல் திரி சொல்லுக்கு மாறுபட்டது என்பர். தெய்வச்சிலையார்" இயற்சொல்லால் உணர்த்தப்படும் பொருள்மேல் வேறுபட்ட வாய்ப்பாட்டான் வருவன திரிசொல்" என்று கூறியதால் இயற்சொல் திரிசொல்லுக்கு மாறுபட்டது என்று ஒப்புவர். மேலும், சேனாவரையரே "நீர்" என்பது ஆரியச் சிதைவு, ஆயினும் இயற்சொல்லாகக் கொள்ளுக என்பதாலும் இயற்சொல்லெல்லாம் வடசொல்லுக்கு மாறுபட்டன" என்று கருத முடியாது என்பது தெளிவு.

முனைவர். க.மீனாட்சிசுந்தரம் "பொது மொழி என்பது ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் அறியக்கூடிய பொதுவான

சொற்களைக் கொண்டது ஆகும்." இதனை இயற்சொல் என்று தமிழ் இலக்கணங்கள் கூறுகின்றன. எனவே, மொழி நூலார் கூறும் பொது மொழி என்பதும் இலக்கண நூலார் இயற்சொல் என்பதும் ஒன்றே எனக்கூறின் பிழையாகாது என்பார். இவர் தம் கருத்தின் அடிப்படை ஏற்றுக்கொள்ளத்தக்கதேயாகும். எனினும் பொதுமொழி என்பது மயக்கம் தரக்கூடியது. நிலைமொழி என்பதே சரியானது.

"நிலைமொழி என்பது ஒரு மொழியில் வழங்கும் பல கிளை மொழிகளில் அரசியல், முதன்மை, வணிகச்சிறப்பு, கலாச்சாரம் ஆகிய நடவடிக்கைகளின் மையம் போன்ற காரணங்களினால் சிறப்பு வாய்ந்த ஒரு கிளைமொழியே. அந்தக் கிளை மொழி, பிறகிளை மொழி மக்களாலும் அறிந்து பயன்படுத்தப்படும். என்று மொழியியலார் நிலைமொழிக்கு விளக்கம் கொடுத்துள்ளனர். இந்தக் கருத்து இளம்பூரணார் கூறிய உதாரணத்தோடும், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கருத்தோடும் ஒத்திருப்பதால் அவர்கள் இயற்சொல் என்பதை நிலைமொழி என்ற பொருளில் பயன்படுத்தி உள்ளார்கள் என்று கொள்ளலாம்.

நிலை மொழிச் சொல் தாய்மொழிச் சொல்லாக இருக்கவேண்டும் என்ற நியதி இல்லையென்று சேனாவரையர் கூறும் கருத்தும் ஏற்புடையதே. இன்றைய இலக்கிய மொழியிலும்கூட வடசொற்கள் உள்ளன. அவையெல்லாம் இயற்சொல்லாகவே கருதப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் வழங்கும் திங்கட்பெயர் நாட்பெயர் முதலியன வடமொழிச் சொற்களே, அவற்றிற்கும் தொல்காப்பியர் புணர்ச்சி விதி கூறியுள்ளார். எனவே, வடசொல்லும் எல்லாப் பகுதியிலும் வழங்குமானால் இயற் சொல்லாகக் கருதப்படவேண்டும் என்பது தொல்காப்பியருக்கு ஒத்த கருத்தாகக் கொள்ளலாம்.

இயற்சொல்லும், திரி சொல்லும் தம்முள் மயங்கக்கூடியன. "மாலை என்பது பொழுதையும், அலங்கலையும் குறிக்குங்கால் இயற்சொல்லாம். மயக்கம் இயல்பு முதலிய பொருள் குறித்து வருங்கால் திரி சொல்லாம். இங்ஙனம் சொல்லின் பொருள் வரவிற்கேற்ப இயற்சொல் திரிசொல் என்பவை தம்முள் மயங்குமென அறிக" என்று பாலசுந்தரம் கருத்து இதனை அரன் செய்கிறது.

## செந்தமிழ் நிலம்

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலானோர் தமிழகத்தின் ஒரு பகுதியை "செந்தமிழ் நிலம் என்பர்" இவர்கள் கருத்தும் சரியானதே. ஆனால் அவர்கள் குறிப்பிட்ட பகுதி குறித்து வேறுபாடுகள் உண்டு.

செந்தமிழ் நிலம் என்பது வையை ஆற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்பார்" இளம்பூரணர். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் இக்கருத்திற்கு உடன்படுகின்றனர். இவர்கள் கருத்தைச் தெய்வச் சிலையார் மறுத்துள்ளார். தெய்வச்சிலையாரின் இயற்சொல் கோட்பாடு வேறுபட்டது. ஆதலால் அவருடைய மறுப்பு முழுவதும் பொருந்தாது.

சங்கர நமச்சிவாயார் நன்னூல் உரைவில் கொடுந்தமிழ் நிலமாக கூறப்படும் புனல் நாடு என்பது சோழ நாடு என்றும், பாண்டிய நாடே செந்தமிழ்நாடு என்றும் கூறி பாண்டியநாட்டிற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை விளக்க "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்" என்ற ஒரு பழம் பாடலை மேற்கோள் காட்டியுள்ளார் என்பார் தேவநேயப்பாவாணர்.

பாண்டி நாடே தமிழ்நாடு என்றும், பாண்டியனே தமிழ் நாட்டான் என்றும் நிகண்டுகள் கூறா நிற்பதும், "வீயாத்தமிழ் உடையான் பாண்டியன் என்று ஒரு பழம் புலவரும், பாண்டிய நின்னாடு உடைத்து நல்ல தமிழ் என்று ஔவையாரும், தமிழ் நிலை பெற்ற மதுரை என்று நத்தத்தனாரும், கூடலின் ஆய்ந்த ஒன்தீந்தமிழ் என்று மாணிக்கவாசகரும் பாடியிருப்பதும், முச்சங்கங்களையும் முறையே முத்தமிழையும் வளர்த்தவர் பாண்டியராயே இருப்பவும், இவற்றை எட்டுணையும் நோக்காது மதுரைக்கு வடக்கே செந்தமிழ் நாட்டை சேனாவரையர் குறித்தது வியப்பிற்கு இடமானது என்பது பாவாணர் கருத்து.

இவர்தம் கருத்துப்படி பாண்டிய நாட்டுத்தமிழை நிலை மொழியாகக் கருதலாம். இக்கருத்து சங்ககாலத்தைப் பொருத்தவரை சரியே. அவர் கூறியதுபோல் பாண்டி நாட்டுத்தமிழ் நிலைமொழியாய் அமையவில்லை என்பது வரலாற்று நோக்கில் புலனாகும்.

# அரிய புதையல்

*புலவர். க.சண்முகம். மதுரை.*

கம்ப இராமாயணத்தில் முதற்போர் புரிபடலம் உச்சமாக விளங்குகிறது. முதல் நாட்போரின் இறுதியில் இராவணன் எல்லாம் இழந்து, விழுதுடை ஆல் அன்ன மெய்யனாக இருபது கரங்களும் தொங்க, தனியனாய் நிற்கிறான். இராமன் விரும்பினால் ஒரு கணை தொடுத்து உயிர் வீடச் செய்திருக்கலாம். பகைவன் மீதும் கருணை கொண்ட இராமன் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' வென விடுத்தான்

ஆளையா வுனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

(யுத்த - முதற்போர் - 255)

இப்பாடலில் கூறப்பெற்றுள்ளவை இடர்ப்பாடின்றி பொருள் கொள்ளத்தக்கவை. ஆயினும், ஆளையா என்ற தொடரின் பொருள் உரையாசிரியர்கள் விளக்கிய பின்னும் தெளிவுறவில்லை யென்றே கற்போர் நினைப்பர்.

தமிழ் சான்ற வைணவப் பேரறிஞர் திரு.வை.மு.கோபால கிருஷ்ண மாச்சாரியார் கம்பராமாயணம் முழுமைக்கும் பேருரை கண்டுள்ளார். அதுபோன்று அரியவுரை காண்பது அரிது என்றே கூறலாம். அன்னார் ஆளையா என்ற தொடருக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் செய்கிறார்.

(அரக்கரை) ஆள்கின்ற ஐயா! உனக்குத் துணையாக அமைந்த சேனைகள் காற்றினால் மோதப்பட்ட பூளைப் பூண்டுகள் போலாயினவற்றைக் கண்டாய் என்றும் அதன்கீழ் விளக்கவுரையில்

வல்லமையற்றுப் போன தருணத்தில் இராவணனை 'ஆள்ஐயா' என விளித்தது இகழ்ச்சியைப் புலப்படுத்தும். இனி ஒரு சாரார் ஆள யாவுனக்கு அமைந்தன என்பது சில வித்துவான்கள்

கூறக்கேட்ட பாடமென்றும், திருநெல்வேலி கவிராயர் ஏட்டுப் பிரதியில் இப்பாடம் காணப்படுகிறதென்றும் கூறுவர். அப்பாடத்திற்குப் பொருள் 'உனக்கு ஆளுமாறு (இப்போது இங்கு) அமைந்த யாவை? என்பது,' என்று விளக்கம் செய்துள்ளார்.

பெருந்தமிழறிஞர் திரு.வெ.ப.சுப்பிரமணிய முதலியார் திட்பமுறச் செய்துள்ள 'கம்பராமாயணச் சாரம்' என்னும் பெருநூலில்,

ஆள யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு

பாடலின் முதற்சீரை 'ஆள' என்று பாடம் கொண்டு, 'ஆள யா(வை) உனக்கு அமைந்தன' என்று வினாக் கேட்பது போல் பொருள் கூறுகிறார்.

மேலும் வெ.ப.சு அவர்கள் தம் விளக்கவுரையில், இப்பாட்டு கம்ப ராமாயணத்திலிருந்து அடிக்கடி எடுத்துக்கூறப்படும் பாட்டுக்களில் ஒன்று. முதன்மையானதென்று கூடக் கூறலாம். நான் பார்த்த அச்சிட்ட புத்தகங்களில் எல்லாவற்றிலும் 'ஆளையா' என்ற பாடமேயுள்ளது. அதற்கு (அரக்கரை) ஆள்கின்ற ஐயா என்றும் 'அரக்கரை ஆளும் அரசனே' என்றும் பொருள் கூறப்பட்டிருக்கிறது. இப்பொருள் இப்பாட்டுக்கு முந்திய இதனோடு தொடர்புடைய, இராமன் இராவணனுக்கு நல்லறிவுறுத்திக்கூறும் வாசகங்கள் அடங்கிய பாடல் தொகுதியில்

அறத்தினாலன்றி அமரர்க்கும்.......... என்றும்
'உடைப்பெரும்' என்ற பாட்டில், சிறுதொழிற் கீழோய் என்றும்,

'சிறையில் வைத்த' என்ற பாட்டில் 'வீடணனுக்கு ஏவல் செய்திருத்தி' என்றும் இகழ்ச்சி உரைப்பதனோடு பொருந்தவில்லை. மாறாக இருக்கிறதென்றும் கூறலாம். 'ஆளயா' என்ற பாடம் சில அறிஞர்கள் கூறக் கேட்டது. அது திருநெல்வேலிக் கவிராயர் ஏட்டுப் பிரதியில் உள்ளது என்று கூறியுள்ளார்.

அண்மையில் (1996) கோவை, கம்பன் கழகம் பேரறிஞர் திரு.அ.ச.ஞானசம்பந்தன் அவர்களை முதன்மைப் பதிப்பாளராகக் கொண்டு முழுமையும் உரையுடன் வெளியிட்டுள்ள 'கம்ப

இராமாயணம் - இராமாவதாரம்' என்ற நூல் தொகுதியிலும்

இப்பாடலை,

ஆளையா வுனக்கு அமைந்த மாருதம் அறைந்த என்று பாடம் கொண்டு 'அரக்கரை ஆள்கின்ற ஐயா' என்றே விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூல் கம்பராமாயண சாரம் போற்றப்பெற்ற காலத்திற்குப் பிந்தியதாயினும் திரு.வெ.ப.சு கொண்டுள்ள 'ஆள யாவுனக்கு' என்ற பாட வேறுபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. இலக்கணம் ஏற்பினும், 'ஆள' என்பதில், எதுகைத்தொடை இயல்பாக அமையவில்லை. 'அரக்கரை ஆள்கின்ற ஐயா' என்று கூறுவது 'பொருந்தாது' என்பதை திரு.வெ.ப.சு அவர்கள் தக்க ஆய்வுடன் காட்டியுள்ளார்கள். மேடைகளில் சிலர் 'ஆளையா' என்ற தொடருக்கு விளக்கம் அமைந்திருப்பதை ஐயமறக்காணலாம்.

பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்தில், அபிமனைக் கொன்ற சயத்திரதனை மறுநாள் பொழுது படுமுன் 'கொல்வேன்' என அருச்சுனன் சூளுரைக்கின்றான். அச்சூளுரையை அறத்தின் வழிப்பட்ட தருமன் துரியோதனனுக்குத் தெரியச் செய்ய கடோற்கசனைத் தூது அனுப்புகிறான். 'நாளை சயத்திரதன் மாள்வான், அருச்சனன் வெல்வான்' என்றுரைத்த கடோற்கசனிடம், துரியோதனன் பதில் கூறுகிறான். 'ஆளை ஆளாக அறியலாம்; அந்த ஆளிடம் அமைந்த ஆற்றலை யாரால் அறிய முடியும்' என்று சொல்கிறான்.

ஆளையா (ள்+நி) ணிலையறிவ தல்லது மற்று
அறிபவர்யார் அணிந்த போரில்
நாளையார் வெல்வ ரெனத் தெரியுமோ என
நவின்று நகைத்தான் மன்னோ
பாளை வாய்நெடுங் கமுகின் மிடறொடியக்
குலைத் தெங்கின் பழங்கள் வீழ
வாளை பாய்க்குரு நாடும் எந்நாடும்
முழுதாளும் மன்னர் கோமான்.

துரோண பருவம். செய் - 236

ஆளை ஆள்நிலை அறிவதல்லது மற்று அறிபவர் யார்? நாளை

யார் வெல்வரெனத் தெரியுமோ? எனத் துரியோதனன் நகைத்தான். இவைதாம் முதல் இரண்டடியின் பொருள். இவை கொண்டு கம்பன் பாடலின் பொருள் அறியலாம். ஒவ்வொருவருக்கும் 'ஆள்' என்ற நிலை பொதுவாகவுண்டு; அவரவர் முயற்சியால், வலிமையால் அமையப்பெறும் சிறப்பு நிலைகளால் மதிக்கப்பெறுவர். அமையப்பெற்ற சிறப்பு நிலை நீங்கி விட்டால் 'ஆள்' என்ற பொதுநிலை மட்டுமே ஒருவருக்கு உண்டு. அமைச்சர் பதவி, அமையப்பெற்ற சிறப்பு நிலை. அது நீங்கி விட்டால் 'ஆள் நிலை' மட்டுமே உண்டு.

இராவணன் தவத்தால் முக்கோடி வாழ்நாள் பெற்றான். வலிமையால் மலை எடுத்தான். ஆற்றலால் மூவுலகையும் ஆண்டான். அவனுக்கு அமைந்தவையெல்லாம் அவனுக்குச் சிறப்பைத் தந்தன. இராமன் முன் வறுங்கையனாய் நிற்கும் இராவணனுக்கு அமைந்தவையெல்லாம் காற்றிடைப்பட்ட பூளைப் பூவாயின. இராவணன் 'ஒரு ஆள்' என்ற பொதுநிலையில் மட்டும் நிற்கிறான். 'ஐயா' என்பது இகழ்ச்சிக் குறிப்புச் சொல். இராமன் சொல்கிறான், 'ஐயா நீ ஒரு ஆள் என்ற நிலையில் மட்டும் நிற்கிறாய்; அமைந்தன காற்றில்பட்ட பூளைப் பூவாயின. நாளை வலி திரட்டி வா' என்றான்.

வில்லிபுத்தூரார் காலத்தும் கம்பன் பாடலின் பொருள் அலைக்கப் பெற்றனவோ என்று ஐயுற வேண்டியுள்ளது. ஆகவேதான், அப்பாடலுக்குப் பொருள் தரும் வண்ணமாகத் தம் காவியத்துள் விளக்கம் செய்துள்ளார். வில்லி பாடலிலும் முதற்சீர் 'ஆளையா' என்று தொடங்குகிறது. நாட்டின் கருப்பொருள் விளக்கத்திலும் ஒற்றுமை உள்ளது. பாடலின் எதுகைத் தொடைகள் மூன்று சொல்லாலும் பொருளாலும் ஒன்றுபட்டுள்ளன. ஆகவே, துரியோதனன் கூற்றாக அமைந்து கம்பன் பாடலுக்கு உரை விளக்கம் தந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

'ஆளையா' என்பதைப் பெயர்த் தொடராகக் கொள்ளாது, வினைத் தொகையாகக் கொண்டு விளக்கம் செய்தமையால் பொருள் பிறழ்ச்சி ஏற்பட்டது. உரையாசிரியர்களின் திறனை தலைமேற்கொண்டு போற்றுகின்றேன்.

‘ஆள்’ என்ற சொல் எல்லோரும் பயன்படுத்தும் எளிய சொல். ஆயினும் கம்பன் வேறிடத்து இச்சொல்லை இப்பொருளில் பயன்படுத்தியுள்ளானா?

ஆள்அற அலங்குதேர் அழிய ஆடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளற தலையற புரவி தாளொடும்
தோளற வடிக்கணை தொடுப்ப காண்டியால்

(அயோத் - திருவடிகட்கு 37)

இப்பாடலில் ‘ஆள் அற’ என்ற தொடரில் ‘ஆள்’ என்ற சொல் ‘ஆட்படை’ என்ற பொருளில் வந்தமை காணலாம்.

கம்பன் பாடற்பொருள் காண, ‘ஆள்நிலை’ என்ற தொடரால் விளக்கம் செய்த வில்லி பாடலை ‘அரிய புதையல்’ எனக்கூறலாமே.

# திருவெம்பாவை 14

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

நீர் விளையாட்டு, காதல் விளையாட்டு - இரண்டிலுமே, மகளிரின் அணிகலன்களும், அழகிய கூந்தல்காடும் அசைந்தாடும். நீர் விளையாட்டில், நீரின் குளிர்ச்சியால் உடல் குளிர, உள்ளமும் குளிரும். பாடல் பிறக்கும். காதல் விளையாட்டில், அன்பின் குளிர்ச்சியால் உள்ளம் குளிர, உடம்பும் குளிரும். அப்போதும் பாட்டுப் பிறக்கும்.

இறைவனின் அனுபவத்தைப்பெற்று, அதில் திளைத்து மகிழ்கின்றவர், அதையே பாவை மகளிரின் நீர் விளையாட்டாக வைத்துப் பாடுகின்றனர்.

மகளிரின் காதில் அணிந்த குழைகள் மின்னிட்டு ஆடுகின்றன. மற்ற அணிகலன்கள் எல்லாம் ஆடுகின்றன. மாலை சூடிய கூந்தல், அந்த மாலையுடனே நீர்ப்பரப்பில் மிதந்து, தானும் ஓர் சிற்றலை எழுப்பி அழகு செய்கின்றது. மலர் எது, மகளிரின் கண் எது என்று அறியாமல் வண்டுகள் ஊசலாடுகின்றன.

"காதார் குழை ஆட, பைம்பூண் கலனாட
கோதை குழல் ஆட, வண்டின் குழாமாட"

இறைவனின் காதலால் வந்த மகிழ்ச்சியால் அருளின் குளிர்ச்சியை அனுபவித்த பூரிப்பால் அவர்கள் பாடுகின்றனர்.

"சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி"

சிற்றம்பலத்துப் பெருமான் தந்த அனுபவத்தை விரித்து விரித்துப் பாடுகின்றனர்.

"வேதப் பொருள்பாடி, அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி"

வேதத்தின் பொருளாவான் யாவன்? இறைவன். அவனைப் பாடுவதால் காதுப்புலன் அடைந்த இன்பத்தைக் 'காதார் குழையாட' என்று காதலியின் செயலாகக் காட்டுகிறார்.

வேதத்தின் பொருளாகி, அந்த வேதமும் காணாமல் நிற்கின்ற இறைவன், எளியராகிய தம்முடைய அனுபவத்திற்கு வந்து கிடைத்ததைப் பாட எண்ணி, தம் உயிர் முழுதும் அவ்வனுபவத்தில் தோய்ந்தது என்பார். அதனை உடலின்மீது ஏற்றி, உடல் ஆட, உடலின் அணிகலன்கள் எல்லாம் ஆடின என்கின்றார். எனவே,

வேதப்பொருள் பாடிக் காதார் குழையாட
அப்பொருள் ஆமா பாடிப் பைம்பூண் கலனாட
என்று இணைத்துப் பார்க்க வேண்டும்

இனி, இறைவனை எந்த நிலையில் மணிவாசக நாயகி அனுபவித்தார் என்பதைப் பாடுகிறார்.

இறைவனுக்கு இரண்டு நிலை, சொரூபம்; தடத்தம். தடத்தத் திருமேனிகள் பல. அவற்றுள் ஒன்று, சோதியாய்த் தோன்றும் அருவுருவம். இதுவே, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியாம் சொரூபத்தைக் காண வழித்தடம் காட்டும்.

மணிவாசகர் துரியாதீதம் என்ற ஆழ்ந்த உணர்வு நிலையில் இருந்துகொண்டு, இந்தச் சோதி யனுபவத்தைப் பெற்றார். துரியாதீதத்தின் இடம் தலைக்குமேல் 12 அங்குலம் ஆதலின், அதைக் கூந்தல் என்று குறிப்பாகக் காட்டிச்

"சோதி திறம்பாடிக் கோதை குழலாட"
என்று பாடுகின்றார்.

இனி, தடத்த நிலையில், சடைமுடியும் கங்கையும் கொன்றை மாலையும் அணிந்து விளங்கும் சிவபெருமான் மணிவாசகக் காதலிக்குக் கொன்றை மாலையை அளித்தான். காதலி சூடி மகிழ்ந்து, அதன் புகழைப் பாடுகின்றார். தேவர் சூடிய மாலை யாதலால், அதில் வண்டுகள் மொய்க்க முடியாமல் ஆடின. எனவே,

"சூழ்கொன்றைத் தார்பாடி வண்டின் குழாமாட"
என்று இணைத்துக்கொண்டு, அதன்பின், "சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி" என்று கொண்டு கூட்டவேண்டும்.

தனக்கு ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் உலகிற்கு ஆதியந்தமாவான். மணிவாசக நாயகிக்கும் அவனே வாழ்முதலாகிய ஆதி. தலைவன் இன்றித் தலைவிக்கு வாழ்க்கை ஏது? அவளுடைய ஆன்மபோதம் கலந்து இன்புறும் பொருள் இறைவன். அவள், தன் பெயர் மறந்து, ஊர் மறந்து, உறவு மறந்து, ஒன்றிநிற்கும் முடிவிடமும் இறைவன்தான். எனவே உலகிற்கும் இறைவனே ஆதியந்தம். மணிவாசக நாயகிக்கும் இறைவனே ஆதியந்தம்.

"ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடி"

உலகிற்கு ஆதியாம் இறைவனின் திறம் எது? அவன் ஐந்தொழில் புரியும் திறம். அதுவே சிற்றம்பலத் திருக்கூத்தினால் காட்டப்பெறுவது. இத்திருக்கூத்தில், அவன் திருவடியில் சிலம்பாய்க் கிடந்து, தாண்டவத்தில் தானமாய் ஒலிப்பது வேதம் சிற்றம்பலத்திருக்கூத்தின் உண்மையைச் சேக்கிழார், "ஐயர்தாம் வெளியே ஆடுவார்" என்று பாடுவார். அது, பரவெளியில், சொரூப நிலையின், இறைவன் ஆடும் ஞானக்கூத்தின் ஊனவடிவம். ஞானக்கூத்தே சோதி திறம்.

இவ்வாறு ஆதியும் சோதியுமாக விளங்கும் இறைவனின் அருளைப் பெறும் வண்ணம் மணிவாசகர் போன்ற அன்பர்களைப் பல்வேறு பிறவிகளில் பக்குவம் ஊட்டி வளர்த்து வந்தவள் அருட்சக்தியாகிய அம்பிகை. அவள் அளித்த அருள்தான் மலமாகிய பெரிய இருளை ஓட்டியது. ஆகவே பாவைநோன்பு நோற்கும் மகளிர். பராசக்தியின் பாதத்தை வாழ்த்திப் பாடுகின்றனர். அம்மையப்பரின் அருட்புனலில் ஆனந்தமாய் ஆடுகின்றனர்.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாலாய்"

# அரியகுறட்பாக்களும் உரிய பொருளும்

*பேரறிஞர் நா.பாலுசாமி*

திருவள்ளுவர் ஒரு பல்கலைக் குரிசில்; அவர் அருளிய திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். மானுடப் பிறவி எடுத்த ஒருவன் அல்லது ஒருத்தி வாழ்வாங்கு வாழ்வதன் வாயிலாகத் தெய்வத் தன்மை அடையலாம் என்று கூறுகிறார், திருவள்ளுவர். அவர் அருளிய 1330 அரிய குறட்பாக்களும் சிந்தனைக்கும் செயலுக்கும் உரியவை. அவற்றுள்ளும் ஒரு சில குறட்பாக்களைத் தெரிவு செய்து அவற்றின் நுட்ப திட்பங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

குறட்பாக்கள் சில சொற்களில் பல பொருள்களை உணரும் வகையில் செறிவானவை. பழைய உரைகாரர் பலரும் தத்தம் அறிவின் திறத்தால் பொருள் விரித்திருந்தாலும், இன்றளவும் திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையை உள்ளவாறு உணர்ந்து கொள்வது, இயலாததாகிறது. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்று' கற்றனைத் தூறி வற்றாது மேலும் சுரக்கும் பொருள் ஆழம் உடையவை குறட்பாக்கள். ஒவ்வொரு குறட்பாவும் சிந்திக்கும் தோறும் புதிய புதிய கருத்துக்களைத் தரவல்லது. திருவள்ளுவர் இங்ஙனம்தான் நினைத்திருப்பார் என்று எத்துணை ஆராய்ச்சியாளராலும் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாத அளவுக்கு அவரது சிந்தனை ஆழமுடையது.

இதனாலன்றோ,

'பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் – சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல்லால்'

என்று அரிசில்கிழார் என்ற பழம் புலவர் மகிழ்ந்து பாராட்டுவாரானார்! மாங்குடி மருதனார் என்ற மற்றொரு சங்கப் புலவர் 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி' என்று வியப்பதும் அது நோக்கியன்றோ!

வாழ்வியல் அறங்கள் கூறவந்த திருவள்ளுவர் வாழ்வின் பல்வேறு துறைகளாகிய அரசியல், பொருளியல், குடியியல், பணியியல் முதலிய செய்திகளைத் திருக்குறளில் விவரித்துள்ளார். குறட்பாக்கள் பொதுவாகத் தெளிவாகவும், செம்பாகமாகவும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைக்கப் பட்டுள்ளவெனினும், சில குறட்பாக்கள் முடிவற்ற ஆராய்ச்சிக்கு இடந்தருவனவாகும். அவற்றுள் சில குறட்பாக்களின் நேரான பொருளினைக் காண முயல்கிறது இக்கட்டுரை.

கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் உள்ள முதற் குறட்பா சிந்திக்கத்தக்கது.

> 'அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு'

என்பது முதற்குறள். இதில் வரும் அகரம், எழுத்தெல்லாம், ஆதிபகவன் ஆகிய தொடர்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தகும். இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை வருமாறு: எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து, மேலும் அவர், அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார். ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிவு.

மேலே கண்ட பரிமேலழகர் உரையில் 'அகரம்' என்பது 'அ' என்ற வரி வடிவத்தையும் 'எழுத்தெல்லாம்' என்பது தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளையும் குறிப்பதாகும். அவ்வாறே பரிமேலழகர் கருதியுள்ளார். மணக்குடவரும் பரிமேலகரைச் சார்ந்தே உரைத்துப் போந்தார். அகம் முதல் எழுத்தாதல் முறைமைபோல் என்றார் பரிதியார். இப்பழைய உரைகளை நோக்கின் திருவள்ளுவரது சிந்தனை அவ்வாறு இருந்திருத்தல் இயலாது எனத் தோன்றுகிறது. இது குன்றக்கூறல் என்னும் குற்றத்தின் பாற்படுவதாகும். ஆழ்ந்து சிந்திப்பின் 'அ' என்பது வரிவடிவத்தைக் குறிக்காமல் 'ஒலி' வடிவத்தைக் குறிப்பதாகக் கொள்ளல் நேரிதாகத் தோன்றுகிறது. இங்ஙனம்

ஒலியாகக் கொண்டால் உலகில் உள்ள அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி விட முடியும். அஃதாவது அகர ஒலி என்பது தமிழுக்கும் வடவெழுத்திற்கும் மட்டுமின்றி எல்லா மொழிகளுக்கும் ஆதி ஒலியே 'அகரம்' என்று கொள்ளுதல் வேண்டும். எங்ஙனமெனின், மனிதன் வாயைத் திறந்தவுடன் முதன்முதல் எழுவதே 'அ' என்னும் ஒலி, வாயைத் திறந்து முயற்சி செய்யின் உலகில் எம்மொழி பேசுவோனாக இருந்தாலும் 'அ' என்னும் ஒலியே பிறக்கும். எழுத்துக்களின் பிறப்புப் பற்றிப் பேசும் தொல்காப்பியர் இவ்வுண்மையைப் பொதுவாக 'அ, ஆ ஆயிரண்டும் அங்காந்து இயலும்' 'தொல். எழுத்.153) என்றார்; அங்காத்தல் வாயைத் திறத்தல் எனப் பொருள்படும். மனிதர்களே அன்றி விலங்குகளும் வாயைத் திறந்து ஒலி எழுப்புமேல் முதலில் 'அ' என்ற ஒலிதான் பிறக்கும். எனவே, எழுத்தெல்லாம் என்ற தொடருக்கு உலக மொழி எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் எனப் பொருள் கொள்வதும், 'அ' என்பதற்கு வரிவடிவம் கொள்ளாது ஒலிவடிவம் கொள்வதும் இத்திருக்குறளுக்கு நேரிய பொருள் காண்பதாகும்.

இனி 'ஆதிபகவன்' என்ற தொடரைப் பரிமேலழகர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகக் கொண்டு ஆதிபகவன் எனப் பகர ஒற்றின்றியிருத்தலின் இது வடநூன் முடிவு என்பர். அஃதாவது, 'ஆதி' என்னும் தமிழ்ச் சொல்லும் 'பகவன்' என்னும் வடசொல்லும் புணர்தலின் பகரவொற்று மிகாதாயிற்று எனக்கொண்டு விளக்கம் தந்துள்ளார் பரிமேலழகர். நன்கு சிந்திப்பின் ஆதி, பகவன் ஆகிய இரு சொற்களுமே தமிழ்ச் சொற்கள் என்பது புலப்படும். 'பகு' என்ற தமிழ் அடிச்சொல்லடியாகப் பிறந்ததே 'பகவன்' என்பது. 'எட்பகவன்ன' என்ற சொல்லாட்சியை நோக்குக (குறள் 889). எனவே, ஆதிபகவன் என்பது ஆதியாகிய பகவன் எனப் பொருள்பட்டு வழங்கும் தனித்தமிழ்த் தொடரேயாகும். இத்தொடரில் ஒற்றுமிகத் தேவையில்லை.

தொல்காப்பியர்,

"உயிரீறு ஆகிய உயர்திணைப் பெயரும்
புள்ளியிறுதி உயர்திணைப் பெயரும்

எல்லா வழியும் இயல்பென மொழிப"

என்பர் (தொல். எழுத்.153). ஆதி - ஆதியானவன்; பகவன் - உயிர்களின் வினைக்கேற்பப் பகுத்தளிப்பவன். இரண்டுமே உயர்திணைப் பெயர்களாகும். இதுகாறும் கூறியவற்றால் இம்முதற் குறட்பாவிற்குப் பின்வருமாறு பொருள் காண்பதே நேரிது எனத் தோன்றுகிறது.

"உலகமொழிகள் எல்லாவற்றிலும் உள்ள எழுத்தொலிகளுக் கெல்லாம் முதன்மையானதும் அடிப்படையானதுமாகிய ஒலி 'அ' என்பதாகும். அதுபோல, உலகத்திற்கு (எல்லா உயிர்களுக்கும்) முதலானவன் ஆதி பகவனாகிய இறைவன் ஆவான்." அன்றியும் இயல்பான அகரவொலிக்குப் பிறிதோர் ஒலி முதலாகாதது போல, ஆதி முதலாகிய இறைவனுக்கும் பிறிதொன்று ஆதியாதல் இல்லை என்பதும் உணரத்தகும்.

அடுத்துச் சிந்தனைக்குரிய குறட்பா அதே கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்பதாகும். இக்குறட்பாவில் ஆய்வுக்குரியது எண்குணத் தான் என்னும் தொடராகும். இதற்குப் பரிமேலழகர், 'எண்வகைப் பட்ட குணங்களை உடையானது தாள்களை வணங்காத் தலைகள்' என்று பொருள் வலிந்துரைப்பார். மேலும், அவர், *எண்குணங்களாவன; தன் வயத்தனாதல், தூயவுடம் பினனாதல்,* இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என இவை' என்று விளக்கமும் தருவாராயினர்.இக்குணங்கள் சைவாகமத்துள் கூறப்பட்டவை என்றும் *அவர் ஆதாரம் சுட்டிக்காட்டிச்* செல்வர். பரிமேலழகரது இவ்வுரைவிரிப்பு திருவள்ளுவரின் உள்ளத்தை உள்ளவாறு வெளிப்படுத்துவதாக இல்லை என்றே தோன்றுகிறது. இவ்விளக்கம் இருவகையான நலிவு மெலிவுகளை உடையது. ஒன்று, திருவள்ளுவர் மேலே கூறிய குணவிசேடங்கள் இறைவனுக்குரியவை என்பதை வேறு எங்கும் நூலுள் குறிப்பிட்டாரல்லர். அன்றியும் அளவிடற்பாலதாகிய குணங்களின்

இருப்பிடமாகக் கருதப் படவேண்டிய இறைவனை இவ்வெட்டனுள் மட்டில் அடக்குதல் பொருந்தாது. மற்றொன்று, இது சைவ ஆகமத்துள் கூறப்பட்டுள்ளது எனின், அது இந்நூலினது சமயப் பொதுமைக்கு இழுக்காக முடியும். மேலும், பரிதியார் என்ற மற்றொரு பழைய உரைகாரர் வேறு வகையான எட்டுக் குணங்களைக் கட்டுரைத்துள்ளார். இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு எண்குணங்களைக் கூறின், அதற்கு வரம்பில்லாது போகும். பரிதியார் கூறும் எட்டுக் குணங்களாவன: அனந்தஞானம், அனந்தவீரியம், அனந்தகுணம், அனந்ததரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அளவின்மை, அழியாவியல்பு என்பனவாம். இவ்வுரை எத்துணைப் பொருத்தமற்றது என்பது வெளிப்படை. மணக்குடவரும் எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணங்களையுடையவன் என்றே பொருள் கொண்டார்.

இப்பழைய உரைகாரர் எல்லோரும் எண் என்பதற்கு எட்டு என்று பொருள் கொண்டதே அவர்களின் உரைமெலிவிற்குக் காரணம். எண் என்பதற்கு எண்ணத்தக்க என்றும் சிலர் பொருள் விரிப்பர். இஃது ஓரளவு பொருந்துமாயினும், வன்மையுடையதாகாது.

இனி இத்தொடருக்கு எட்டு என்று எண்ணிக்கைப் பொருள் கொள்ள வேண்டும் என்று கருதினால், ஒரு கால் பின்வருமாறு பொருள் கொள்ளக் கடவுள் வாழ்த்து அதிகாரமே இடம் தருகிறது. இது ஒரு புதிய உரை அணுகுமுறையாகும். எண்குணத்தான் என்ற தொடர் வரும் குறட்பா கடவுள் வாழ்த்து அதிகாரத்துள் ஒன்பதாவதாகும். அக்குறளுக்கு முன் உள்ள எட்டுக் குறள்களில் எண் வகையான இயல்புகள் இறைவனுக்குக் கூறப்படுகின்றன. அவை: உலக முதலாதல், வாலறிவு, மலர்மிசை ஏகுதல், வேண்டுதல்,வேண்டாமை,இலாமை, இருவினையும் சேராமை, ஐந்தவித்தல், தனக்குவமையிலாமை, அறவாழி ஆதல் என்பனவாகும். இவ்வுரை பொருத்த முடையதே. ஆயின் இதனை ஏற்பின் திருவள்ளுவரே அதிகாரம் வகுத்தாரென்றும், அதிகாரத்துள் குறட்பாக்களை இன்னதன்பின் இன்னது என்னும் வைப்புமுறை செய்தாரென்றும் கொள்ள நேரிடும். ஆயின் இஃது உண்மையன்று. ஒவ்வோர்

உரைகாரரும் குறட்பாக்களின் முறை வைப்பை மாற்றியுள்ளனர். இக்காரணத்தால் இவ்வுரையும் மெலிவுரையாகிறது. இனித் திருவள்ளுவர் தமது நூலுள் 'எண்' என்பதனை எத்தனை இடங்களில் எவ்வெப்பொருளில் ஆண்டுள்ளார் என்று நோக்குவது பயனுடையதாகும்.

(1) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
(2) எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

இவ்விரு குறள்களில் முதல் குறளில் எண் என்பது கணிதம் என்ற பொருளிலும், பின்னதில், நினைத்தல் அல்லது எண்ணுதல் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளன என்பது தெளிவு. இனிப்பின்வரும் குறட்பாக்களை நோக்குவோம்:

(1) எண் பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு
(2) எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.
(3) எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

இக்குறட்பாக்களுள் எண்பதம் என்பதற்கு எளியசெவ்வி என்றே பரிமேலழகர் பொருள் கொண்டார். அதுபோன்றே எண்பொருள் என்பதற்கும் எளிமையாக என்று பொருள் கண்டுள்ளார். இவ்வாற்றால் திருவள்ளுவர் எண் என்பதற்கு எண்ணிக்கை, எண்ணுதல் அல்லது நினைத்தல், எளிமை, எளியசெவ்வி என்று வெவ்வேறு வகையான பொருள்கள் கொண்டுள்ளார் என்பது தேற்றம். இறைவன் அளவிற்கரிய குணக்குன்றாவான். குறிப்பிட்ட எட்டுக் குணங்களுள் அடங்குபவன் அல்லன். இறைவன்பால் உண்மையான அன்பு வைத்தவர்களுக்குத் தானே மேலிருந்து கீழே இறங்கி வந்து எளிமை காட்டி (எளிவந்த செம்மை) அருள்பாலிப்பவன் என்று பொருள்கொள்வதே சாலச் சிறந்ததாகத் தோன்றுகிறது. இதனை வைணவர்களும், சைவர்களும் 'சௌலப்பியம்' (எளியனாந் தன்மை) என்று கூறுவர். இது பொதுவாக அனைத்துச் சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளத்

தக்கதேயாம். திருமுருகாற்றுப் படையுள் முருகனே இரவலனிடம் ஆற்றுப் படுத்தல் காண்க. அடியவர் இடர் தீர்க்க இறைவன் உரிய காலத்தில் ஓடோடியும் இறங்கி வந்து எளிமையாகக் காட்சியளித்தல் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அறிஞர் மேலும் ஓர்வாராக.

அடுத்து அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துள் வரும்,

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை'

என்னும் குறட்பா சிந்திக்கத்தகும். இதற்கு அறிஞர் பலரும் பலவாறு பொருள் கண்டுள்ளனர். ஆயின் இன்றளவும் திருவள்ளுவர் எப்பொருளில் இக்குறளை அமைத்தார் என்பது புரியாத புதிராகவே உள்ளது. பழைய உரைகாரரும், திருவள்ளுவர் கருத்திற்கேற்ப உரைகண்டனரா என்பதிலும் ஐயம் தோன்றுகிறது. இக்குறளுக்குப் பரிமேலழகர் பின்வருமாறு உரை கூறுவார். "அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்". மணக்குடவர், பரிதியார், காளிங்கர் போன்றோரும் இங்ஙனமே பரிமேலழகர் உரையை ஏற்பாராயினர். இதன் பொருள் விளக்கம் நெடிய சிந்தனைக்குரியது. பரிமேலழகர் உரையின் 'ஆறு' என்பது 'பயன்' என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மணக்குடவரும் காளிங்கரும் 'ஆறு' என்பதற்கு 'நெறி' என்று பொருள் கொண்டனர்.

இக்குறளுக்குச் சிலர், பல்லக்கைச் சுமப்பவனும், அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது எனக் கூற வேண்டா என எதிர்மறைப் பொருள்பட விளக்குவாராயினர். அறம் கூறவந்த திருவள்ளுவர் இதுபோன்று தமது நூலுள் வேறு எங்கும் எதிர்மறை முகமாக அறத்திற்கு விளக்கம் தந்திலர் என்பது நோக்கத்தகும். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்களுள் 1, 2, 3, 6, 8, 9, 10 ஆகிய ஏழு குறள்களில் பொதுவாக அறம் செய்க என்று வலியுறுத்துகிறாரேயன்றி, இதுதான் அறநெறி அல்லது அறத்தின் பயன் என்று

உணர்த்தினாரல்லர். குறள்கள் 3, 5 ஆகிய இரண்டும் மனமாசின்மை, அழுக்காறின்மை, அவாவின்மை, வெகுளியின்மை, இன்னாச் சொற்கூறாமை முதலியவற்றையே அறம் என்று கூறுகின்றன. இவை அறத்தின் 'பயனை' உணர்த்தவில்லை. ஏழாம் குறளாகிய 'அறத்தாறு இதுவென வேண்டா' எனத் தொடங்கும் ஒன்றுதான் ஓரளவு அறநெறி எது என்பதனை விளக்குகிறது. பழைய உரைகளை ஏற்போமாயின், 'உல்லாசமாக ஒருவன் பல்லக்கில் உட்கார்ந்து கொண்டு கீழ்மைப்படுத்தும் நோக்கத்துடன் மற்றொருவனைத் தூக்கச் செய்வது என்பது இதன் பொருளாக இருத்தல்கூடாது.

இனித் திருக்குறளார் முனிசாமி அவர்கள் இக்குறளுக்குப் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார். 'மக்களிடையே உயர்ந்த மேலோராகக் கருதப்படும் சான்றோர்களைப் பல்லக்கில் வைத்துத் தூக்கிச் சிறப்புச் செய்வதையும், தேரில் ஏற்றி வைத்து இழுப்பதையும் இன்றும் காணலாம். பெரியோரைச் சிறப்புச் செய்வதும் ஓர் அறம் என்பது கூறப்பட்டது' இவரது பொருள்விளக்கம் ஒப்புக் கொள்ளத்தக்கதெனினும் ஓரளவு வலிந்து பொருள் கொள்வதாகக் கருத இடம் தருகிறது. ஆயின் திருவள்ளுவர் யாது நினைந்து இக்குறள் பாடியிருப்பார்? இது மேலும் சிந்தனையைத் தூண்டுகிறது.

பல்லக்கில் ஊர்ந்து செல்பவன் புண்ணியம் செய்தவன் என்றும், அதனைச் சுமந்து செல்வோன் பாபம் செய்தவன் என்றும் திருவள்ளுவர் எண்ணியிருப்பாரா? இன்று உயர்ந்த அலுவல் புரிகின்ற அதிகாரி ஒருவர் தானே தனது காரினை (ஊர்தி) ஓட்டிச் செல்வதும் அதில் தன் ஊழியர் ஒருவரை ஏற்றிச் செல்வதும் நடைமுறையில் உள்ளதே? இந்நிலையில் காரோட்டியாகிய அதிகாரி பாபம் செய்தவர் என்றும் அதில் ஏறிச்செல்லும் அவரின் ஊழியன் புண்ணியம் செய்தவன் என்றும் கருத வேண்டியிருக்குமன்றோ? எனவே, பரிமேலழகர் போன்றோர் அறத்தாறு என்ற தொடரில் வரும் 'ஆறு' என்பதற்குப் பயன் என்று பொருள் கொள்ளுதல் பொருந்தாது. ஆறு - வழி, நெறி எனக்கொண்டு அறநெறி என்றே இத்தொடருக்கும் பொருள் கொள்ள வேண்டும். அப்படியானால் வள்ளுவர் பல்லக்குக் காட்சியால் உணர்த்த நினைத்தது யாது? மக்கள் பல்வேறு

கடமைகளை ஆற்ற வேண்டியவர்கள். உழவன், வணிகன், முதலாளி, தொழிலாளி போன்ற பல்வேறு நிலைகளில் வாழ்க்கை நடத்துவோர் தத்தம் கடமைகளை ஒழுங்காகவும், செம்மையாகவும் அறம் பிறழாமலும் ஆற்றும் பொறுப்பு மிக்கவர்கள். இவர்களுள் யார் ஆற்றும் கடமை சிறந்தது அல்லது தாழ்ந்தது என்று கூறுதல் தகாது. ஏனெனில் கடமை உணர்ச்சி என்பது அனைவர்க்கும் ஒரு நிகரானது. முதலாளி ஆற்றும் கடமை உயர்ந்ததென்றோ, தொழிலாளி ஆற்றும் கடமை தாழ்ந்தது என்றோ கூறுவதும் பொருந்தாதன்றோ? ஆயின் உலகினர் பொதுவாகச் சுமப்பவனைப் பற்றிக் கீழான கருத்துடையவராக இருத்தலை உணர்ந்த திருவள்ளுவர் பல்லக்கினைச் சுமப்பவனாயினும் அவனது அறநெறி தவறாக் கடமையின் சிறப்பினை ஈண்டு எடுத்துக் கூறி மக்களின் ஐயத்தைப் போக்கவே இக்குறளினை அருளினார் எனக்கொள்ளலாம். ஆகவே, இக்குறட்பாவிற்குப் பின்வரும்பொருள் சிறந்ததாக இருக்கும். அறிஞர் மேலும் சிந்திப்பாராக.

"அறத்தாறு (நெறி) இதுவோ அதுவோ என்று மயங்க வேண்டா? பல்லக்கில் அமர்ந்திருப்பவனைச் சுமப்பவனது நெறிதவறாக் காட்சியே (கடமை) அறநெறி இன்னது என்பதனைத் தெளிவுறுத்தும்"

இனி இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்துள் வரும் முதற் குறட்பாவும் ஆராய்ச்சிக்குரியது. அது வருமாறு:

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை"

இக்குறட்பாவில் இயல்புடைய, மூவர் ஆகிய இரு சொற்களும் தெளிவாகப் பொருள் கொள்ளும் செஞ்சொற்களாக அமையவில்லை. 'மூவர்' என்பார் யாவர்? 'இயல்புடைய' என்றால் எத்தகைய இயல்பு? இக்கேள்விகளுக்கு விடை காண வேண்டும். பரிமேலழகர்,

> "இல்லறத்தோடு கூடிவாழ்வானென்று சொல்லப்படுவான் அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்"

மேலும் அவர், ஏனை மூவராவார் ஆசாரியனிடத்தினின்று ஓதுதலும் விரதம் காத்தலுமாகிய பிரமச்சரிய ஒழுக்கத்தாலும், இல்லைவிட்டு வனத்தின்கண் தீயோடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக்கத்தாலும், முற்றும் துறந்த யோக வொழுக்கத்தாலும் என இவர். இவர் உரை இல்லறத்தான், பிரம்மச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்ற நால்வகை நிலைகளைச் சுட்டிக்காட்டுகிறது. இது வடநூல் வழக்கு. திருவள்ளுவரோ இல்லறம் துறவறம் என்ற இரண்டையுமே கூறியுள்ளார். இவர் கூறும் துறவறமும் வடவர் கூறும் துறவு போன்றன்று. இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வரும் ஒருவன் தன் வீடு, தன்பெண்டு, தன் பிள்ளை என்ற கட்டுக்குள் தன்னை அடைத்துக் கொள்ளாமல் விரிந்த உள்ளத்துறவு மேற்கொள்ள வேண்டும் என்பதே திருவள்ளுவரின் கருத்தாகும். இனி மனக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகிய ஏனை உரைகாரரும் பரிமேலழகர் கூறியவாறே நால்வகை நிலைகளை விரித்துரைத்துப் போந்தனர்.

ஈண்டு ஒரு செய்தி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். அறம் கூறவந்த திருவள்ளுவர் எடுத்த எடுப்பிலேயே விளக்கமும் விரிவும் இன்றி மூவர் என்று குறிப்பிடுவாரா? தமது குறள் நூலில் பிறயாண்டும் இவ்வாறு தொகைச் சொல்லால் விளக்கமின்றிக் குறிப்பிட்டாரல்லர். தொகைச் சொல் ஆண்ட சில குறட்பாக்களை நோக்குவோம்.

(1) 'அவர்செய்த, ஒன்று நன்று உள்ளக்கெடும்.' (குறள் 109)
(2) 'எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்' (குறள் 392)
(3) 'காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றன்' (குறள் 360)
(4) 'அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்' (குறள் 382)
(5) 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்' (குறள் 27)
(6) 'படைகுடிகூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்' (குறள் 381)

மேலே காட்டிய சான்றுகளால் திருவள்ளுவர் தொகைப்பெயர் பெய்து பாடுங்கால் கவனமாக அத்தொகைப் பெயரால் சுட்டப்படுவனவற்றையும் விவரமாக விரித்துரைப்பது அவரது வழக்கம். 'இயல்புடைய மூவர்' என்ற தொடரில்தான் திருவள்ளுவர் மூவர் யாவர் என்பதை விரித்துரைத்தாரல்லர். ஏன்? எனின், அவர் காலத்து அத்தொகைப் பெயர் அல்லது எண்ணுப் பெயர் தெளிவாக யாவர்க்கும் தெரிந்திருக்க

வேண்டும். பழைய உரையாசிரியர் பலரும் நால்வகை நிலைகளையே வரைந்தோதினராக, இன்றளவும் புதிய ஆய்வுரைகள் பலதோன்றி பற்பல வகையாக 'மூவர்' என்பதற்கு மனம் போன போக்கில் உரை காண்பாராயினர். தலைவர், தொண்டர், மக்கள் என மூவர் என்றும், ஆசிரியர், பெற்றோர், மாணவர் என மூவர் என்றும் இவ்வாறு பற்பலவாறு உரை காண்பாராயினர். இது திருவள்ளுவர் கருத்துக்கு ஏற்புடையதாகுமா? அன்றியும் இவ்வாறு கொள்வதற்கு அகச்சான்றோ புறச்சான்றோ இலக்கியத்திலிருந்து காட்ட முடியுமா? இக்கேள்விகளுக்கு அவ்வுரையாளர்கள் பதில் கூற இயலாது.

எனவே, 'மூவர்' என்பார் யாவர் என்பதற்கு விடை காண 'இயல்புடைய' என்ற சொல்லடைக்குப் பொருள் கண்டாக வேண்டும். 'இயல்புடைய' என்பது 'இயல்பான' எனப் பொருள்படும். இத்தகைய அடையைத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள சில இடங்களைக் காண்போம்.

(1) இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை - (குறள் 47)
(2) இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு - (குறள் 545)

இக்குறட்பாக்களை நோக்குங்கால் இல்லறத்தானாகிய குடும்பத் தலைவனுடன் இயல்பாகவே சேர்ந்து வாழக்கூடிய மூவர் யார் எனக் காணல் வேண்டும். திருவள்ளுவர் உலகியல் கூற வந்தவர். எனவே ஒரு தந்தையுடன் (குடும்பத் தலைவன்) அல்லது துணையால் அவனுடன் வாழக் கூடியவர்கள் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய முத்திறத்தோரேயாவர். இதற்குப்பல சான்றுகள் பழைய உரையினின்றும், இலக்கியத்தினின்றும் காட்டலாம். இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காப்பியத்துள் கோவலன் கூற்றாக வரைந்துள்ள பகுதி சிந்திக்கத்தகும்.

"பொச்சாப்பு உண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி யுண்டோ
இருமுதுகுரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்

வழுவெனும் பாரேன்....." ( சிலப். கொலைக்களக் காதை வரி 65 - 69)

கோவலன் மதுரையில் மாதரி என்ற இடைக்குல மடந்தையின் இல்லத்தில் கண்ணகி சமைத்துப் படைத்த அமுதினை உண்டு அடைக்காய் போட்டுக் கொண்டு கண்ணகியை முன்னிலைப் படுத்தித் தனது குறைபாடுகளைச் சொல்லி வருந்துகிறான். அப்போது அவன் வயது முதிர்ந்த தாய் தந்தையரைக் கவனியாது போனதும், மனைவியாகிய கண்ணகியைப் புறக்கணித்ததையும் நினைந்து வருந்துவதாக வரும் அடிகள் மனங்கொள்ளத்தக்கன. எனவே, இல்வாழ்வான் கடமை பெற்றோரையும் மனையாளையும் பேணிப் போற்றுதல் வேண்டும் என்பதாகும். மனைவி கணவனுக்குத் துணை; கணவன் மனைவிக்கும், பெற்றோர்க்கும், பிள்ளைகளுக்கும் துணை. இது இல்லற இயல்பு; பழைய மரபாகும்.

இனிப் பரிமேலழகர்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள் 656)

என்னும் குறட்பாவுக்குக் கண்டுள்ள உரை மனம் கொள்ளத்தகும். அது வருமாறு:

"இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொதுவிதி, பொருள்நூல் வழி ஒழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கு எய்தாமை பற்றி இவ்வாறு கூறினார்" இவ்வுரையால் வயது முதிர்ந்த பெற்றோர், தன்னைச் சார்ந்து வாழும் இயல்புடைய மனைவி மக்கள் ஆகிய முத்திறத்தினர்க்கும் 'இல்வாழ்வான்' என்று சிறப்பித்துக் கூறப்படும் தலைவன் அவர்கள் நலமாக வாழ்வதற்குத் துணையாக இருக்கும் கடப்பாடுடையவன் என்பதே இக்குறட்பாவுக்கு நேரிய உரையாகத் தோன்றுகிறது. இது அனைவர்க்கும் தெரிந்த ஓர் அறமாதலின் 'மூவர்' எனத் தொகையாகக் கூறினார். திருவள்ளுவர் விவரிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை.

இனி வினைத்தூய்மை என்ற அதிகாரத்துள் வரும்,

"எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

என்ற குறட்பா ஆய்வுக்குரியது. இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு: "யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாது ஒழிக; அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையன் ஆயினானாயின் பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாது ஒழிதல் நன்று என்றவாறு" மேலும் அவர் அச்செயற்குப் பின்னிருந்து இரங்குவானாயின்,

1) அது தீரும் வாயில் அறிந்திலன் - எனவும்,
2) திட்பம் இலன் - எனவும்,
3) பயனில்லன செய்கின்றான் - எனவும்,
4) தன் பழியைத் தானே தூற்றுகின்றான் - எனவும்.

எல்லோரும் இகழ்தலின் பின் இரங்காமை நன்று என்றார்" என்று விரிவான விளக்கமும் தந்துள்ளார்.

இப்பழைய உரையை மறுக்கும் ஆராய்ச்சி அறிஞர்சிலர், 'பின்னர் தானே வருத்தப்படத்தக்க செயல்களை மீண்டும் (மற்று) செய்யாதிருத்தல் நன்று' என்று உரை கூறுவர்.

இக்குறட்பாவில் நெடிது சிந்திக்க வேண்டிய சொற்கள், 'இரங்குவ' 'அன்ன' என்பனவாகும். 'செய்யற்க' என்னும் வினைமுற்றுக்குச் செயப்படு பொருளாக வரும் 'இரங்குவ' என்பதற்கு இரங்கத்தக்க செயல்கள் அல்லது வினைகள் என்பதற்கு கருத்து வேறுபாடு இல்லை. பழைய உரைகாரர்களும் புதிய உரைகாரர்களும் இதில் கருத்தொற்றுமை உடையவர்களே ஆயின் அடுத்த அடியில் வரும் 'அன்ன' என்ற சொல்லுக்குப் பொருள் கொள்வதில்தான் கருத்து வேறுபாடு. 'செய்யற்க' என்னும் எதிர்மறை வினை முற்றின் செயப்படுபொருளாகிய 'அன்ன' என்பதற்கு அத்தகைய 'இரங்கல்கள்' என்று பொருள் கொள்வதா அன்றி 'இரங்கத்தக்க செயல்கள்' என்று பொருள் கொள்வதா என்பதில் அறிஞர் வேறுபடுகின்றனர்.

பரிமேலழகர், 'இரங்குவ என முன் வந்தமையின் பின், 'அன்ன' எனச் சுட்டி ஒழிந்தார்' என்பர். இவர் கருத்தின்படி 'அன்ன' என்னும் அஃறிணைப் பன்மைப்பெயர் 'அ' என்னும்

சுட்டின் அடியாகப் பிறந்த பலவின்பாற் பெயராகும். அங்ஙனமாயின் 'அன்ன' என்னும் சுட்டுப்பெயர், 'இரங்குவ' (இரங்கத்தக்க வினைகள்) என்பதைத் தான் சுட்டும்; 'இரங்கல்கள்' என ஒரு சொல்லை வருவித்துக் கொண்டு அதனைச் சுட்டுவதாகக் கொள்வது பொருத்தமுடையதன்று.

இனி, 'அன்ன' என்ற பெயர் உவம இடைச் சொல்லடியாகப் பிறந்ததாகக் கொண்டால், அத்தகைய பின் நினைந்து வருந்தத்தக்க 'வினைகள்' என்ற நேர்பொருளைத் தரும். அவ்வாறாயின் இக்குறளுக்குப் பின்வருமாறு பொருள் கொள்ளமுடியும்.

"யான் செய்தது எத்தகையது (இத்தன்மையவாயினவே) என்று செய்தவன் பின்னர் தானே வருந்தும்படியான வினைகளைச் செய்யாதிருப்பானாக; ஒருகால் தவறிச் செய்து விடுவானாயின், அத்தகைய வினைகளை (அன்ன) மீண்டும் (மற்று) செய்யாது தவிர்வானாக." அதிகாரம் வினைத்தூய்மையாதலானும், ஈண்டுத் திருவள்ளுவர் தூயவினைகளே செய்தல் வேண்டும் என்று வலியுறுத்துவதாலும், இப்பொருள் கொள்வதே பொருத்த முடையதாகும். அன்றியும் பின்னிருந்து வருந்தத்தக்கச் செயல்களைச் செய்து முடித்த ஒருவன் தான் செய்த தவற்றை மறைத்துத் தான் செய்தது பொருத்தமுடையதே என்று பிடிவாதமாகச் சாதித்து நிற்பது இவ்வுலகில் பலரும் செய்யும் செயற்பாடுகளாதலின், திருவள்ளுவர் இக்குறளின் இரண்டாம் அடியும் 'மற்று அன்ன' (மீண்டும் இவ்இரங்கத் தக்க செயல்களை) செய்யாதே என்று எச்சரிக்கிறார். ஆனால் பரிமேலழகர் இவ்வுரையை, 'பின் தொடர்ந்து செய்வானாயின் அவை போல்வனவும் செய்யாமை நன்று எனப் பிறரெல்லாம் இயைபு அறவுரைத்தார்' என்று மறுத்துள்ளார். மனக்குடவரும் பரிதியாரும் 'அவை போல்வன மீண்டும் செய்யாமை நன்று' என்ற கருத்துப்படவே உரைத்துப் போந்தனர். ஆனால், காளிங்கர் இவர் யாவரினும் சிறிது வேறுபட்ட பொருள் காண்பாராயினர், அதுவருமாறு:

"இவைதகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தகுவனவாகிய தூயது அல்லாத கருமங்களைச்

செய்யாது ஒழிக; இங்ஙனம் இதனைக் குறிக்கொண்டு செய்வான். ஆயினும், செய்யும் கருமம் செய்யுமிடத்தும் பிறர்க்கு இரக்கம் வருதல் .செய்யாமையே நன்று என்றவாறு." அஃதாவது, ஒருவன் பின் இருந்து வருந்தத்தக்க செயல்களைச் செய்தல் கூடாது; ஒருவேளை அவ்வாறு செய்யும் சூழ்நிலை ஏற்படுமிடத்தும் பிறர் வருந்தாவண்ணம் அவற்றைச் செய்க என்பதாம். காளிங்கர் கருத்தும், நன்கு சிந்திப்பின் இக்குறட்பாவின் நேரிய பொருளுக்குப் பொருந்துமாறு இல்லை என்பது புலனாகும்.

இதுகாறும் கூறியவற்றால், பரிமேலழகர் உரை சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருப்பினும் திருவள்ளுவர்தம் கருத்துக்கு அரண் செய்வதாகத் தோன்றவில்லை. செய்யக்கூடாத ஒரு செயலைச் செய்து முடித்த பின்னர், அதற்காக வருந்திக் கொண்டிருப்பதில் யாது பயன் என்று வினவி, அதற்குப் பலவாறு தருக்க முறையிலான விளக்கங்கள் கூறி, பின்னிருந்து வருந்தவேண்டா என்று முடிக்கிறார் பரிமேலழகர். இவ்வாறு பொருள் கொள்ள இக்குறட்பா இடந்தரவில்லை என்பது கவனிக்கத்தகும். எனவே, 'அன்ன' என்ற சொல்லுக்கு அத்தகைய செயல்கள் என்று கொள்ள வேண்டுமேயன்றி, 'இரங்கல்கள்' என்று பொருள் கொள்ள இயலாது.

பெருமை என்னும் அதிகாரத்துள் வரும் குறள் ஒன்று அடுத்து ஆய்வுப் பொருளாகிறது. அக்குறள்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (972)

என்பதாம். இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:

"எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே எனினும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா, அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டான் என்றவாறு." அவர் மேலும் விளக்கம் தரும் வகையில், வினை வயத்தான் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயன் அனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் 'பிறப்பொக்கும்' என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் 'சிறப்பு ஒவ்வா' என்றும் கூறினார்" என்பர்.

இனி மணக்குடவரும், பரிப்பெருமாளும், "எல்லா உயிர்க்கும் பிறப்பான் ஒரு வேறுபாடில்லை; ஆயினும் தான் செய்தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது என்றவாறு" என்பர். பரிதியார், "மனிதர் எல்லோரும் சனனத்தால் ஒப்பர்; ஆசாரத்தினாலே நற்குலத்தராவர் என்றவாறு. நற்குலத்தர் ஆவர் என்றதால் இழிதொழிலாலே இழிகுலமாவர் என்பதாம்" என்று உரை கண்டனர். காளிங்கர் என்பார், "மக்களாகிய அனைவர்க்கும் பிறப்பின்கண் ஒரு வேற்றுமை இல்லை; அம்மக்கட்குச் சிறப்பு ஒவ்வாது என்பது என்னையோ எனில், இயல்பு நீங்கிய இழிவுதொழில் ஒருவர்க்கு உளதாயின் இவர் சாலச்சிறியர் என்றும், தமக்கு இயல்பாகிய பேரொழுக்கத்தின்கண் பிழையாது ஒழுகி இவர் சாலப் பெரியார் என்றும் இங்ஙனம் வழங்கி வருதலால் யாவர்க்கும் சிறப்பு ஒவ்வாது என்பது தெரிந்து கொள்ளப்படும் என்றவாறு" என்று உரையெழுதிப் போந்தார். இவரது உரையால் ஒருவரது சிறப்பு அல்லது சிறப்பின்மை அவரது ஒழுக்கமுடைமை அல்லது அஃதின்மை என்பதனைப் பொறுத்தது என்பது தெளிவாம். ஆயின் இங்குக் காட்டிய குறட்பாவோ ஒழுக்கத்தைப் பற்றியது அன்று; அவரவர் மேற்கொள்ளும் தொழில் அல்லது காரியம் பற்றியதாம். எனவே காளிங்கர் உரை ஈண்டுப் பொருந்து மாறில்லை என்பது புலனாம். பரிதியாரும் ஆசாரமே காரணம் என்று கூறுகின்றாராதலால் அவருரையும் பொருந்துமாறில்லை.

இனிப் பரிமேலழகரும் மணக்குடவருமே தொழில் பாகுபாட்டால் சிறப்பு ஒவ்வாது என்று உரைத்துள்ளனர். இவர்தம் கருத்து வள்ளுவரின் உண்மையான உள்ளக்கிடக் கையை உணர்த்துமாறில்லை. திருவள்ளுவர் தமது நூலில் எத்தொழிலையும் இகழ்ந்தாரல்லர். கிரேக்க நாட்டு அரித்தாட்டிலால் இழிவாகக் கருதப்பட்ட வேளாண்மையையே விதந்து ஓதுவராயினார், திருவள்ளுவர். அங்ஙனமாகவும் ஒருவன் செய்யும் தொழில் வேறுபாட்டால் அவனது சிறப்பு கணிக்கப்படும் என்பது பொருந்தாவுரையாகும்.

பரிமேலழகரும், மணக்குடவரும் 'செய்தொழில்' என்ற தொடரை வினைத் தொகையாகக்கொண்டு உரை செய்துள்ளனராதலால் இப்பொருத்தமின்மை தோன்றலாயிற்று.

'செய்தொழில்' என்ற தொடரை வினைத்தொகையாகக் கொள்ளாமல் 'தொழில்செய்' என்று முன்பின்னாக மாற்றித் தொழிலைச் செய்யும் முறை வேறுபாட்டால் சிறப்பு அனைவர்க்கும் ஒத்தலில்லை எனப் பொருள்கொள்வதே நேரிதாகும். இவ்வாறு கொள்ளும்போது 'செய்' என்பதனை முதல்நிலைத் தொழிற் பெயராகக் கருதவேண்டும். 'செய்தல்' என்பது 'செய்' என்று ஈறுகெட்டு முதல் நிலையாயிற்று. 'அறிகொன்று' என்ற இடத்து 'அறிவு' என்பது வுகர ஈறுகெட்டு 'அறி' என்று நின்று தொழிற் பெயராயினமை காண்க. (குறள் 638) ஈண்டுப் பரிமேலழகர் 'அறி' என்பது முதல் நிலைத் தொழிற்பெயர் என்று குறித்துள்ளமை காணலாம்.

அன்றியும் பரிமேலழகர் பிறிதொரு குறளுக்கு உரை கண்டபோது, கையாண்ட இலக்கண உத்தியினை ஈண்டுக் கையாண்டிருப்பரேல் இக்குறளுக்கு நேரான உரை கண்டிருக்கமுடியும்.

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்" (குறள் 653)

இக்குறட்பா வினைத் தூய்மை என்னும் அதிகாரத்தில் வருவது. இதற்குப் பரிமேலழகர் மிகவும் கவனமாகச் 'செய்வினை' என்ற தொடருக்குப் பொருள் கொண்டுள்ளார். உரை முழுதும் வருமாறு:

"மேலாகக் கடவேம் என்று கருதுவார் தம் ஒளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க என்றவாறு"

இதனை மேலும் விளக்குமுகத்தான், 'செய்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது என்றும், 'அன்றிச்' 'செய்வினை' என வினைத்தொகை ஆக்கிய வழிப் பொருளின்மை அறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்று என்பதாம் என்றும் கூறியுள்ளார். ஈண்டுச் 'செய்வினை' என்னும் வினைத்தொகை நிலைத் தொடரை 'வினைசெய்' என்று முன்பின் தொக்கதாகக் கொண்டும், 'செய்' என்பதனை முதனிலைத் தொழிற் பெயராகக் கொண்டும் உரை கண்ட பரிமேலழகர் 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் குறளில் வரும் 'செய்தொழில்' என்ற வினைத் தொகையை 'தொழில் செய்'

என்று மாற்றிச் 'செய்' என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொள்ளாமல் உரை கண்டதால்தான் உரைப் பொருத்தமின்மை ஏற்பட்டது என்பது சிந்திக்கத் தகும்.

இதுகாறும் கூறியவற்றால் 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் குறளுக்குக் கீழ்வருமாறு உரை காண்டலே வள்ளுவர் உள்ளத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் என்று கருதலாம்.

"எல்லா மக்களுயிர்க்கும் (பொதுவாகிய) பிறப்பியல்பு
ஒக்குமே எனினும், (பெருமை சிறுமை எனப்பட்ட)
சிறப்பியல்புகள் அவை மேற்கொள்ளும் தொழில்களைச் செய்து முடிக்கும் திறமை வேறுபடுதலால் ஒவ்வா"

இவ்வுரையால் ஒருவன் அல்லது ஒருத்தி வாழ்க்கைக்கு எத்தொழிலை மேற்கொண்டாலும் அதனை முட்டின்றிச் சிறப்பாக முடிக்கும் ஆற்றல் வேறுபாட்டால் சிறப்பும் வேறுபடும் என்பதும், தொழில்களுக்கிடையே சிறப்புடைத் தொழில், சிறப்பில் தெழில் எனத் தொழில் வேறுபாடுகள் இல்லை என்பதும் பெறப்படும். 'சந்து தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்' எனப் பாரதியார் பாடியதும் நோக்கத்தகும்.

இனி மற்றொரு குறட்பா பல அறிஞரின் ஆராய்ச்சிக்கும் அகப்படாமல் இன்றளவும் புதிராகவே உள்ளது. அது,

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

என்பது. இங்குக் கவனிக்கத்தக்க சொல் பார்ப்பான் என்பதாம். இக்குறளுக்குப் பரிமேலழகர்,

"கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணம் கெடாமையில்

பின்னும் அஃது ஓதிக்கொளலாம்; அந்தணனது உயர்ந்த வருணம்

தன் ஒழுக்கம் குன்றக் கெடும்"

என்று பொருள்கண்டு, மேலும் விளக்குவாராய், "மறந்தவழி இழிகுலத்தனாம் ஆகலின், மறக்கலாகாது என்னும் கருத்தான் 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்" என்றார்.

மணக்குடவர், "பிராமணன் வேதத்தினை ஓதி மறந்தானாயினும் பின்னும் ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கம் குறையுமாயின் குலம் கெடும் என்றவாறு" என்பர். பரிதியாரும் இப்பொருள்படவே உரைத்துள்ளார். இனிக் காளிங்கரும் தனது குலமரபுக்கு முதற்காரணமாகிய தானோதிய வேதத்தை மறந்தானாயினும் பின்னும் அஃது ஓதிக் கொளலாயிருக்கும்; மற்று அந்தணனது குலப்பண்பு "தனது ஆசாரம் குறைபடவே கெடும் என்றவாறு" என்று பொருளுரைத்தார். இப்பழைய உரைகாரர் அனைவரும்,

1) ஒத்து என்பது வேதம் - எனவும்,
2) பாப்பான் என்பது வேதம் ஓதும் பிராமணன் - எனவும்,
3) ஒழுக்கம் குன்றின் அவனது உயர் வருணம் கெடும் - எனவும்

வருணாசிரமத்தை மனங்கொண்டு குறுகிய நிலையில் உரை கண்டுள்ளனர். இவ்வாறு உரைப்பது திருவள்ளுவரின் உள்ளத்திற்கு உகந்ததா? திருக்குறள் வருணாசிரமக் கோட்பாட்டை ஒப்புக்கொள்கிறதா? நூலுள் வேறு எங்கேனும் பார்ப்பான் என்ற சொல்லைத் திருவள்ளுவர் வேதியர் அல்லது பிராமணர் அந்தணர் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளாரா? இவை போன்ற கேள்விகளுக்கு விடைகாணல் வேண்டும். இவ்வுரைகாரர் எல்லோரும், "பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம்" என்று கொண்டு பொருள் கண்டுள்ளனர். அங்ஙனமாயின் பார்ப்பானது ஒழுக்கம் குன்றினால்தான் கேடு வருமோ? பிறரது ஒழுக்கம் குன்றில் என்னாம்? அன்றியும், 'பிறப்பு' என்பதற்கு இவரெல்லாம் 'குலம்' அல்லது 'வருணம்' என்றே பொருளுரைத்துள்ளனர் என்பதும் நோக்கத்தகும். இக்குறளின் தொடர்களை இவ்வாறு சேர்க்காமல்,

1) பார்ப்பான் மறப்பினும் ஒத்துக் கொளலாகும் - என்றும்
2) பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - என்றும்

இக்குறட்பாவின் சொற்றொடர்களைக் கொண்டு கூட்ட வேண்டும். இங்ஙனம் கொள்ளும்போது பார்ப்பான் யாவன்? ஒத்து என்பது யாது? எனக் காண்டல் வேண்டும். ஒத்து என்பது வேதமாகிய வடவர் நூலினைத்தான் குறிக்கும் எனக்

கொள்ளலாகாது. திருவள்ளுவருக்கு அது கருத்தாயின் 'வேள்வி' போன்ற சொற்களைப் பயன்படுத்திய அவர் 'வேதம்' என்பதனையும் பயன்படுத்தியிருப்பார். சங்கத் தொகை நூல்களில் 'வேதம்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. "நால் வேதம் நெறி திரியினும்" என்பது புறநானூற்றடி. ஒத்து என்பது ஓதப்படுவது என்று பொருள்பட்டு, தொடர்ந்து ஓதப்படும் அறநூலுக்குக் குறியீடாயிற்று எனக் கொள்ளல் வேண்டும். பண்டைத் தமிழகத்தில் மக்களுக்கு அறிவு கொளுத்தவும் அறம் உணர்த்தவும் ஆன்றோர் சிலர் வாழ்ந்து வந்தனர். இன்றும் அத்தகைய சான்றோரைச் சமுதாயத்தில் மதித்துப் போற்றுகின்றனர். உயர்ந்த சமய நூல்களையும் சாத்திரங்களை யும் ஓதுவதனையும் பிறர்க்கு உணர்த்துவதனையும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழும் பெரியோர் அல்லது அறிவர் சிலர் எக்காலத்தும் உளராவர். இவர்கள் பொதுவாக ஒழுக்கமும் ஞானமும் கைவரப் பெற்ற முத்தராவார்கள். பார்ப்பான் என்பது இத்தகைய அறநூல்களைப் பார்ப்பவன் அல்லது ஓதுபவன் என்றே பொருள்படும். பார்ப்பான் என்ற சொல் ஒரு திரிசொல்; அரிதாகப் பயன்படுத்தப்படும் சொல். திருக்குறள் முழுமையும் இச்சொல் ஒரே இடத்தில்தான் ஆளப்பட்டுள்ளது. உலக வழக்கில்கூட ஒருவர், 'இந்த நூலைப்பார்; அந்த நூலைப்பார்' என்று கூறுவதுண்டு. நூல்களை ஆராய்பவரும் பார்ப்பார் எனப்படுவர். 'பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும்' எனப் புறநானூறு கூறுவதும் காண்க. இங்குப் பார்ப்பார் என்பது 'அறிவர்' அல்லது 'அறம் உரைப்போர்' எனப் பொருள்படும். பார்ப்பார் என்பதனை சிந்தித்துப் பார்ப்பார், ஆராய்ந்து பார்ப்பார் என்னும் பொருளில் சேக்கிழாரும், ஆண்டுள்ளார்.

"மற்றுஅவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்காளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடாது இழியக் கண்டும்

இற்றையின் நிலைமைக் கென்னோ? இனிச்செயல் என்று
பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்பது 'ஊனுக்குஊன்' எனும் உரைமுன்
கண்டார்"

பெரியபுராணம்: கண்ணப்பர்)

இப்பாடலில் வரும் 'பார்ப்பார்' என்பது அப்பொருள்பட்டமை காண்க. இவ்வாறு கொள்ளவே குறளுக்கு நேரிய உரை காண முடியும்.

"பார்ப்பான் மறப்பினும் ஓதிக் கொளலாகும் - (அறநூல்களைப் பார்க்கும்)

அறிஞன் அல்லது அந்தணன் தான் நாளும் பார்க்கும் நூற்பொருளை மறந்தானாயினும், அதனை மீண்டும் ஓதிக் கொள்ளலாம்;

பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் - மானுடப்பிறப்பு (உயர்ந்ததாயினும்)

ஒழுக்கம் சிதையுமாயின் பயனற்றுப் போகும்"

இங்குப் 'பிறப்புக்கெடும்' என்பது பிறவிப் பயன் ஒழியும் என்பதாம் அரிது அரிது மானுடராதல் அரிது! ஞானமும் கல்வியும் நவில்தல் அதனினும் அரிது! ஆதலால் இத்தகு மானுடப் பிறவி ஒழுக்கம் இல்லையாயின் பயனின்றாம் என்பது. இவ்வாறு உரை கொள்வதே திருவள்ளுவரின் சிந்தனைக்கு ஏற்றதொன்றாகும்.

இனி வெருவந்த செய்யாமை என்ற அதிகாரத்துள் வரும்,

"செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்"

என்ற குறள் சிந்தித்து மகிழத்தக்கதாகும். இதற்குப் பரிமேலழகர் கண்டுள்ள உரை பெரிதும் மெச்சத்தக்கதாம். அது வருமாறு:

"செரு வருவதற்கு முன்னே தனக்குப் புகலாவதோர் அரண் செய்து கொள்ளாத அரசன், அது வந்த காலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதிற்கெடும் என்றவாறு"

இக்குறட்பாவில் தொடர்கள் கிடக்கை முறையில் பொருள் கொள்ளப்படுமாயின் பொருள் நலிந்துபடும் என்பதனை உணர்ந்த பரிமேலழகர், 'சிறைசெய்யா வேந்தன் செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும்' என்று சொற்களைப் பிரித்துக் கூட்டிப் பொருள் கண்டுள்ளமை வியத்தற்குரியதாகும். பாடல் கிடக்கை முறையில் பொருள் கொள்ளப்பட்டால், 'செருவந்தபோது தற்காப்புச் செய்துகொள்ளாத வேந்தன்' என்று பொருள்படும். வேந்தன்

தன்னையும் குடிமக்களையும் பிற பகைவேந்தர் தாக்குதலினின்று காக்கக் கடமைப்பட்டவன். அவன் முன்யோசனையுடன் போர்வரும் என்று எதிர்பார்த்து அதுவருதற்கு முன்னரே தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என்பது போர் உத்தியாகும். சான்றாக, 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற சீன-இந்தியப் போரைக் காட்டலாம். அன்றையப் பிரதமர் பண்டிதநேரு அவர்கள் விரிந்த உள்ளத்துடனும், திறந்த மனத்துடனும், 'யாரொடும் பகை கொள்ளாது' அனைத்து நாடுகளுடனும் நட்புக் கொள்ளும் மேலான நட்புக்கொள்கை கடைப்பிடித்து வந்தார். சீன நாட்டுடனும் மிகுந்த நேசமும் பாசமும் காட்டிச் சீனநாடு, ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெறுவதற்கும் பாடுபட்டார். அதனால் இந்தியாவை எந்நாடும் படை எடுக்க நினைக்காது என்று கருதி இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய ஆக்க முறையிலான செயல் திட்டங்களுக்கு பெரும்பொருள் செலவிட்டார். படைப்பெருக்கம் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. ஆயின் நடந்தது என்ன? எதிர்பாராத வகையில் திடீரென இந்தியாவின் மீது சீனா படையெடுத்தது. அப்போது நாம் போருக்குத் தயார் நிலையில் இல்லாததால் நம் படைகள் பின்வாங்க நேரிட்டது. இத்தகைய சூழ்நிலை வராமல் தடுக்கவே திருவள்ளுவர் மிகவும் கவனமாக இக்குறட்பாவை அமைத்துள்ளார் எனலாம். அதனினும் மேலாகப் பரிமேலழகர் இந்த உண்மையை நன்கு உணர்ந்து மிகவும் நுட்பமாக இக்குறளின் தொடரை முன்பின் மாற்றிப் பொருள் கொண்டது வியப்பினும் வியப்பாகும். இவ்வுரை பரிமேலழகரின் நுண்மண் நுழைபுலத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்,

புகழ் என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள ஒரு குறள் ஆய்வாளர் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. மிகச் செறிவான அக்குறள்,

> "நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
> வித்தகர்க் கல்லால் அரிது"

என்பதாகும்.. இக்குறளுக்கு மணக்குடவர்.

> "ஆக்கம் போலக் கேடும் உளதானாற்போலச்
> சாதலும் வல்லவர்க்கு அல்லது அரிது"

என்று பொருள் கூறுவர். பரிமேலழகர்,

"புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்பு உளதாகும்; சாக்காடும் சதுரப்பாடு உடையவர்க்கல்லது இல்லை 'போல்' - உரையசை" என்று சிறிது விளக்கமுறப் பொருள் கண்டுள்ளார்.

மேலும் அவர்,

*"ஆக்கமாகும் கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல்; உளதாகும் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றால் நிலையாயின எய்துவார் வித்தகராகலின், 'வித்தகர்க்கு அல்லால் அரிது'* என்று விரித்தும் விதந்தும் விளக்கிப் போந்தார். இனிக் காளிங்கர்,

"வலம்புரிச் சங்கானது தன்னிலை குலைந்து பிறர் கைப்படினும் தன் பெருமை குன்றாதது போல இல்லறம் இயற்றும் நல்லறிவாளர் தாம் வாழுமிடத்தும் கெடுமிடத்தும் தம் புகழ் விளங்கக்கெடுவதோர் கேடும், அதுவே அன்றி, மற்றிறந்துபடினும் விரி புகழ் விளக்கம் *அல்லது மற்றுளோர்க்கு என்றும் அரிது என்றவாறு*"

எனப் 'போல்' என்ற உவம உருபுக்கும் பொருள் கொண்டு விரிவுரை பகர்ந்தார். மணக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகிய மூவரும் இக்குறளில் வரும் 'போல்' என்பதனை, உவம உருபாகக் கொள்ளவும், பரிமேலழகர் மட்டில் அதனை 'உரையசை' என்பாராயினர். 'நத்தம்' என்பதற்குச் சங்கு அல்லது வலம்புரிச் சங்கு என்று பிறர் பொருள் கொண்டிருப்பதும் பரிமேலழகர் ஆக்கம் (வளர்ச்சி) என்று பொருள் கொண்டுள்ளார். இவற்றுள் எதுபொருந்தும்? என்பது கேள்வி, திருவள்ளுவர் இக்குறட்பாவில் உணர்த்தக் கருதியது யாது? என்பது நீண்ட சிந்தனைக் குரியதாகிறது. பரிமேலழகர், இக்குறளில் வரும் 'ஆகும்' என்பதனை முன்னும் கூட்டி, அரிது என்பதனைத் தனித்தனிக் கூட்டியுரைக்க என்பர், அதன்படி

"நத்தம் (ஆகும்) கேடும் (அரிது); உளதாம் சாக்காடும்
அரிது . இது வித்தகர்க்கே இயலும்"

என்று சொற்களை முன்னும் பின்னும் கூட்டி உரை காண வேண்டியுள்ளது. இது பரிமேலழகரின் அறிவுக் கூர்மையைப் புலப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. அஃதாவது நத்தம் - வளர்ச்சி அல்லது ஆக்கம் அல்லது செல்வம்;

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா.சதாசிவம்
பேராசிரியர். நா. பாலுசாமி
பேராசிரியர். தமிழண்ணல்
பேராசிரியர். சுப. அண்ணாமலை
பேராசிரியர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேராசிரியர். ம.ரா.போ. குருசாமி
பேராசிரியர். கதிர். மகாதேவன்
பேராசிரியர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேராசிரியர். அ. தட்சிணாமூர்த்தி
பேராசிரியர். ந. வாசுகிராஜா
பேராசிரியர். இ.கி. இராமசாமி
பேராசிரியர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116